# IV. ஆளணிச் செய்திகள்

ஆளுநர், திரு. எச். ஈ. தென்னக்கோன், 1974 மாச்சு, 1 ஆம் நாள் தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களுக்கான 9வது மாநாட்டில் கலந்து கொள்ள நேபாளத்திற்குச் சென்று 1974 மார்ச்சு 12 ஆம் நாள் திரும்பினர்.

ஆளுநர், 1974 ஏப்பிரல் 14 ஆம் நாள் ஆசிய உற்பத்தி அமைப்பு ஆட்சிக் குழுவின் 16வது அமர்வில் கலந்துகொள்ளச் சிங்கப்பூரிற்குச் சென்று 1974 ஏப்பிரல் 21 ஆம் நாள் திரும்பினர்.

ஆளுநர், 1974 யூன் 5 ஆம் நாள் பன்னாட்டுத் தீர்பனவுக்கான வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளப் பாசேல் சென்றார், அவர் பின் இலண்டனிலும் வாசிங்டனிலும் நடைபெற்ற கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு 1974 யூன் 30இல் திரும்பினர்.

பன்னாட்டு நாணய நிதியத்தின் இலங்கையின் மாற்றுப்பதில் ஆளுநரான, ஆளுநர் வாசிங்டனில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம், பன்னாட்டு புத்தாக்க அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஆண்டுக் கூட்டங்களில், பன்னாட்டு நாணய நிதியத்தினதும் பன்னாட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் இலங்கையின் ஆளுநரான நிதியமைச்சர் கலாநிதி என். எம். பெரேராவுடன் (நா.உ.) கலந்து கொண்டார். அவர் இலண்டனிலும், நியூயோர்க்கிலும் தன் பணித்துறையை ஒட்டிக் கலந்துரையாடினர். அவர், 1974, செத்தெம்பர் 14 ஆம் நாள் இலங்கையிலிருந்து சென்று, 1974, ஒற்ருேபர் 15 இல் நாடு திரும்பினர்.

ஆளுநர், 1974 திசெம்பர் 8ஆம் நாள் பாங்கொக்கில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத் தொடக்கக் கூட்டத்தில் கலந்துகொள்ள இலங்கையிலிருந்து சென்றார். பின்னர், தன் பணித்துறை அலுவல் தொடர்பாக தெரானிற்குச் சென்று, 1974 திசெம்பர் 17 இல் திரும்பினர்.

நிதியமைச்சின் செயலாளர் திரு. சீ ஏ. கூறே வாசிங்டனில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியத்தினதும் பன்னாட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ள வெளிநாடு சென்றிருந்த காலப்பிரிவில் நிதியமைச்சின் பதில் செயலாளர் திரு. எல். பி அபேரத்தின நாணயச் சபையின் பணித்துறை சார்ந்த உறுப்பினராகச் செயலாற்றினர்.

1974, ஒற்ருேபர் 28 ஆம் நாள் நடைமுறைக்குவந்த 1974 இன் 37 எண் நாணயச் சட்ட திருத்தச்சட்டப் பிரிவு 8 (2) (இ) திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளராக அவ்வேளையில் பணிபுரிபவர் நாணயச்சபையின் உறுப்பினராவதற்கு இடமளித்தது. திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி எச். ஏ. டி எஸ், குணசேகர வெளிநாடு ஏகிய காலப்பிரிவில் அவருக்குப் பதில் கடமையாற்ற

நியமனம் பெற்ற திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் கலாநிதி எஸ். ஏ. மீகம 1974, ஒற்றோபர் 31 ஆம் நாளின் நாணயச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

துணை ஆளுநர், கலாநிதி காமினி கொரியா 1974. ஏப்பிரல் 1ஆம் நாள் முதல் ஐக்கிய நாடுகளின் வர்த்தக மாநாட்டின்செயலாளர் நாயகமாகப் பதவி ஏற்றார்.

துணை ஆளுநர், கலாநிதி டபிள்யூ, எம். திலகரத்தின தொடர்ந்தும் பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்றுப் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

ஆளுநர், இலங்கையில் இல்லாது வெளிநாடு சென்றிருந்த 1974 மாச்சு 2 ஆம் நாள் முதல் 1974 மாச்சு 14 ஆம் நாள் வரை, 1974 ஏப்பிரல் 14 ஆம் நாள் முதல் 1974 ஏப்ரல் 22 ஆம் நாள் வரை, 1974 யூன் 5 ஆம் நாள் முதல் 1974 யூலை 1 ஆம் நாள் வரை, 1974 செத்தெம்பர் 14 ஆம் நாள் முதல் ஒற்றோபர் 15 ஆம் நாள் வரை, 1974 திசெம்பர் 8 ஆம் நாள் முதல் 1974 திசெம்பர் 17 ஆம் நாள் வரையான காலப் பகுதிகளில் நாணய நிதிச் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கிணங்க துணை ஆளுநனரான திரு. பீ. வீ. எம். பர்ணாந்து மூத்த துணை ஆளுநனராகப் பதவியிலமர்த்தப்பட்டு, வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகக் கடமை ஆற்றினார்.

1974, சனவரி 4 ஆம் நாள் முதல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களப் பணிப்பாளர் கலாநிதி டபிள்யூ. இராசபுத்திரம் உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

பொது நிர்வாக உள்நாட்டு அரசாங்க, அலுவல்கள் அமைச்சிற்கு விடு விக்கப்பட்ட திரு. பி. எச். சிறிவர்த்தன 1974ஆம் ஆண்டு மாச்சு மாதம் 1ஆம் நாள் வங்கிப்பணியில் இருந்து விலகிக்கொண்டார்.

வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரான திரு. ஜெ. ஜி. பி. ஜயசுந்தர 1974ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 1ஆம் நாளிலிருந்து அபி விருத்தி நிதித் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

உட்டுறைக் கணக்காய்வாளர் திரு. எம். பி. பெரேரா 1974ஆம் ஆண்டு 14ஆம் திகதி, ஒற்றோபர் மாதத்தில் இருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு கொண்டார்.

பொருளாதார ஆராய்ச்சிப் பதில் பணிப்பாளரான கலாநிதி எச். என். எஸ். கருணாதிலக்க 1974ஆம் ஆண்டு சனவரி மாதம் 4ஆம் திகதியிலிருந்து பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். வங்கி மேற் பார்வை மூத்த துணைப் பணிப்பாளரான திரு. ரி. சச்சிதானந்தம் 1974ஆம் ஆண்டு சனவரி மாதம் 4ஆம் நாளிலிருந்து அபிவிருத்தி நிதித் திணைக்களத் திற்கும் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் 1974ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 1ஆந் திகதியிலிருந்து பதில் உட்டுறைக் கணக்காய்வாள ராக நியமிக்கப்படடார்.

மூத்த துணைச் செலாவணிக் கட்டுப்பாட்டாளரான, திரு. ஏ. டி. மோட்டிமர் 1974ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதியிலிருந்து பதில் மேலதிகச் செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமனம் பெற்ருர். மேலும் இவர் உட்டுறைக் கணக்காய்வாளரான திரு. எம். பி. பெரேரா 1974ஆம் ஆண்டு ஒற்ரேுபர் மாதம் 14ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து இளைப்பாறிக் கொண்டதிலிருந்து, தனது கடமைகளுடன் உட்டுறைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வேலைகளை, 1974ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 1ஆம் நாள் திரு. ரி. சச்சிதானந்தம், பதில் உட்டுறைக் கணக்காய்வாளராக நியமனம் பெறும் வரை மேற்பார்வை செய்வதற்கு நியமிக்கப்பட்டார்.

சிறப்பு அலுவலாளரான திரு. டி. எல். கன்னங்கர 1974ஆம் ஆண்டு சனவரி மாதம் 4ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமனம் பெற்ருர். இவர் 1974ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 1ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைப் பதில் பணிப்பாளராக நியமனம் பெற்ருர்.

நிதியமைச்சில் கடமைபுரிந்து கொண்டிருந்த திரு. எச். ஆர். டி. சொயிசா 1974 ஆம் ஆண்டு சன்வரி மாதம் 1 ஆம் நாளிலிருந்து, 3 ஆண்டுகளுக்குப் பன்னுட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.

திரு. எ. எச். ஜயவர்தன நிலச் சீர்திருத்தக் குழுவின் அங்கத்தவராக 1974 ஆம் ஆண்டு யூலை 10 ஆம் நாள் வரை தொடர்ந்திருந்தார். கலாநிதி எஸ். ரி. ஜ். பர்ஞுந்து 1974 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20 ஆம் நாள் வரை, முகவர் நிலையங்களினதும், தரகர் நிறுவனங்களினதும் விசாரணைக் குழுவில் அங்கத்தவராகத் தொடர்ந்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் பணிபுரிந்து கொண்டிருந்த கலாநிதி ஜி. உஸ்வத்த ஆராய்ச்சி 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து விலகிக் கொண்டார்.

திட்டப் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட கலாநிதி எஸ். எம். பி. சூரியாராய்ச்சி 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் நாளிலிருந்து மீண்டும் வங்கிப் பணிக்கு அமர்த்தப்பட்டார். இவர், 1974 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து விலகிக் கொண்டார்.

தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட கலாநிதி ஆர். சி. வணிகதுங்க 1974 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணிக்கு மீண்டும் அமர்த்தப்பட்டார்.

திட்டப் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட திரு. பி. எம் அசன், 1974 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 8 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணிக்கு மீண்டும் அமர்த்தப்பட்டார். இவர் அதனைத் தொடர்ந்து 1974 ஆம் ஆண்டு ஒற்ரேுபர் மாதம் 1 ஆம் நாளிலிருந்து உள்நாட்டு, வெளிநாட்டு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டார்.

ஆய்வுக்கு எடுக்கப்பட்ட இவ்வாண்டில், மத்திய வங்கியைச் சார்ந்த பின் வரும் அலுவலர்கள், அரசாங்கத்திற்கும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் முழுநேர விடுவிப்பின் கீழ் தொடர்ந்திருந்தார்கள்.

கப்பற் போக்குவரத்துச் சுற்றுலா அமைச்சு – திரு. பி. பீ. கரந்தவெல
அரச இரத்தினக் கற் கூட்டுத்தாபனம் – திரு. ரி. ஜி. புஞ்சிஅப்புகாமி
திட்டப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு – கலாநிதி எம். ஏ. பர்ணர்ந்து
நிதி அமைச்சு – திரு.எச்.எம்.ஆர்.எல்லபொல